## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

<table>
<tr><td colspan="4">2023-ம் ஆண்டு ஜீன் மாதம் 6-ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>செல்வராஜ்</td><td>தொழில் :</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td>திருவேங்கடம்</td><td>சமயம் :</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி :</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**6.6.2023 OS No. 69/2019 பி.வா.சா.1**செல்வராஜ் **ஆஜர்**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. தாவா சொத்திற்கான ஜமீன் காலத்திற்கான வருவாய் ஆவணப் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(வருவாய் ஆவணப்பதிவேடு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.65/1939 க்கான தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(தீர்ப்பாணை பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சிவகங்கை சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு எண்.7/1941 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்பாணை பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** புல எண்.93/1 க்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(அ பதிவேடு பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 5.3.1999ம் தேதியிட்ட பாகஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(பாகஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பட்டா எண்.1024ல் என் பெயரிலுள்ள கணினி பட்டா இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன்.**(பட்டா பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புல எண்.93ன் உட்பிரிவுகளுக்கான அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(அடங்கல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** புல எண்.93ன் உட்பிரிவுகளுக்கான அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(அடங்கல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**பட்டா எண்.1115ல் முத்துலட்சுமி பெயரிலுள்ள கணினி கூட்டா பட்டா இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன்.**(பட்டா பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(புல வரைபடம் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 23.7.2021ம் தேதியிட்ட என் பெயரிலுள்ள தீர்வை ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(தீர்வை ரசீது பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4. 8.11.**2022ம் தேதியிட்ட என் பெயரிலுள்ள தீர்வை ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(தீர்வை ரசீது பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் (9 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.13 வரிசை (9 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்களின் குறுந்தகடு தாக்கல் செய்கிறேன்.**(குறுந்தகடு பி.வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்திற்கான சொத்து வரி ரசீதுகள் (5 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(சொத்து வரி ரசீதுகள் பி.வா.சா.ஆ.15 வரிசை (5 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் 6 முதல் 15 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தையவை என்று ஆட்சேபணை தெரிவித்தார். பிரதிவாதி தரப்பில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி தன் பெயருக்கு பட்டா மாற்றிவிட்டார் என்றும் வாதியின் மறுப்பிற்கு ஆட்சேபணை தெரிவித்தார். ஆவணங்களின் செல்லும் தன்மை குறித்து வழக்கின் இறுதியில் முடிவு செய்யப்படும்)**

**5.** 1.6.2017ம் தேதியிட்டு தாவா சொத்தில் அனைவரும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் எனக்கு கொடுக்கப்பட்ட அனுமதி உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன்.**( அனுமதி உத்தரவு பி.வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இந்து சமய அறநிலையத்துறை சிவகங்கை இணை ஆணையரின் 18.11.2019ம் தேதியிட்ட உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன்.**( உத்தரவு பி.வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 24.11.1984ம் தேதியிட்ட என் வகையறா செண்பகமூர்த்திக்கு எழுதிக்கொடுத்த கிரையஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**( கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**6.** என் பெயரிலுள்ள மின்கட்டண ரசீதுகள் (2எண்ணம்) அசல் தாக்கல் செய்கிறேன்.**( மின்கட்டண ரசீதுகள் பி.வா.சா.ஆ.19 வரிசை(2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இந்து சமய அறநிலையத்துறை சிவகங்கை இணை ஆணையரின் அசல் மனு எண்.8/21ல் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு சார்பு நகல் தாக்கல் செய்கிறேன்.**( அறிவிப்பு பி.வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் 4.2.2021ம் தேதியிட்ட விசாரணை அறிவிப்பு சார்பு நகல் தாக்கல் செய்கிறேன்.**( விசாரணை அறிவிப்பு பி.வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**7.** இந்நீதிமன்ற மு.வ.எண்.71/2019ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **( தீர்ப்புரை பி.வா.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இந்நீதிமன்ற மு.வ.எண். 71/2019ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **( தீர்ப்பாணை**

**பி.வா.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் 22, 23 வரையிலான ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டவை இல்லை என ஆட்சேபணை தெரிவித்தார். மேற்படி வழக்கானது சொத்துக்கள் சம்பந்தப்பட்ட கோயில்கள் தனிநபர் கோயிலா இல்லையா என்று முடிவு செய்யப்பட்டிருப்பதை பொறுத்து தாக்கல் செய்திருப்பதாக தெரிவித்தார். எனவே வாதிதரப்பு ஆட்சேபணை நிராகரிக்கப்படுகிறது.)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.